**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.11/2026**

**IN**

**அசல் வழக்கு எண்.16/2016**

1. வேலுசெட்டியார் (இறப்பு)
2. கணபதி
3. குருநாதபிள்ளை ....மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகள்

/எதிர்/

1. பாலம்மாள்
2. ராஜலட்சுமி ....1, 2 எதிர்மனுதார்கள்/வாதிகள்
3. அழகுசுந்தரம்
4. தங்கம்
5. கணேசன்
6. பால்வண்ணன் ....3 முதல் 6 எதிர்மனுதார்கள்/ 3 முதல் 6 பிரதிவாதிகள்

இம்மனுவானது 08.07.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், மனு, 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.07.21 18:23:20 +0530

**உத்தரவு**

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9–ன் கீழ், 2ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட நத்தம் சர்வே எண்.1021/A3 சொத்தை 2ம் மனுதாரர் தனது குமாரர் சந்திரகுமார் என்பவருக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்து அனுபவத்தையும் ஒப்படைத்துவிட்ட நிலையில், மேற்படி விபரங்கள் அனைத்தும் வாதிகளுக்கு நன்கு தெரிந்திருந்தும், மேற்படியாரை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்று கூறி இத்துடன் தாக்கல் செய்துள்ள விரிவான கூடுதல் எதிர்வழக்குரையை வாங்கி அங்கிகரித்துக் கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர்கள் அசல் வழக்கில் 2, 3 பிரதிவாதிகள் என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்கள் மீதும் இதர எதிர்மனுதாரர்கள் மீதும் விளம்புகை மற்றும் அதனைத் தொடர்ந்து நிரந்தர ஏவுகட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில், 2ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட நத்தம் சர்வே எண்.1021/A3 சொத்தை 2ம் மனுதாரர் கடந்த 17.10.2014 தேதியில், அதாவது இவ்வழக்கிற்கு முன்பாகவே 2ம் மனுதாரரின் மகன் சந்திரகுமார் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்து அனுபவத்தையும் ஒப்படைத்து விட்டதாகவும், மேற்படி விபரங்கள் அனைத்தும் வாதிகளுக்கு நன்கு தெரிந்திருந்தும், மேற்படி 2ம் மனுதாரரின் குமாரர் சந்திரகுமார் என்பவரை இவ்வழக்கில் வேண்டுமென்றே கட்சி சேர்க்கவில்லை என்றும், மேற்படி சந்திரகுமார் இவ்வழக்கிற்கு மிகவும் அவசிய கட்சி ஆவார் என்று கூறி இத்துடன் கூடுதல் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி கூடுதல் எதிர்வழக்குரை தனது கட்சியை நிரூபணம் செய்யக்கூடிய மிக முக்கியமானதாகும் என்றும், ஆகையால், 2ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட நத்தம் சர்வே எண்.1021/A3 சொத்தை 2ம் மனுதாரர் தனது குமாரர் சந்திரகுமார் என்பவருக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்து அனுபவத்தையும் ஒப்படைத்துவிட்ட நிலையில், மேற்படி விபரங்கள் அனைத்தும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.07.21 18:23:32 +0530

வாதிகளுக்கு நன்கு தெரிந்திருந்தும், மேற்படியாரை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்று கூறி இத்துடன் தாக்கல் செய்துள்ள விரிவான கூடுதல் எதிர்வழக்குரையை வாங்கி அங்கிகரித்துக் கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை என்றும், மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கினை காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு பின்பு பிரதிவாதிகள் சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகளை விசாரணை செய்யாமல் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறாகும் என்றும், மேலும், 1ம் எதிர்மனுதாருக்கு வயது முதிர்வின் காரணமாக உடல் உபாதை நோய் ஏற்பட்டு கஷ்ட ஜீவன வாழ்க்கை செய்து வரும் நிலையில் வாதிகள் தரப்பில் அசல் வழக்கில் விரைவில் நிவாரணம் பெறவிடாமல் தடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்கள் தரப்பில் காலம் கடந்து இம்மனுவினை தாக்கல் செய்தும் அதனுடன் உண்மைக்கு புறம்பான சங்கதிகள் குறிப்பிட்டு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறாகும் என்றும், மேலும், அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் மூலம் ஆஜர் செய்து எதிர்வழக்குரை தாக்கல் செய்து கடந்த 2016ம் வருடம் முதல் வழக்கு நடத்திவரும் நிலையில் மனுதாரர்கள் தரப்பில் தற்போது அசல் வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளது அசல் வழக்கினை காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக உள்ளது என்றும், மேலும், அசல் வழக்கில் கண்ட 1ம் வாதிக்கு தற்போது 80 வயதிற்குமேல் ஆகிவிட்டதாலும் அசல் வழக்கில் கண்ட 2ம் வாதிக்கு (வா.சா.1)க்கு தற்போது 50 வயதிற்குமேல் ஆகிவிட்டதால் மூட்டுவலி ஏற்பட்டு நடக்க முடியாத சூழ்நிலையில் மருத்துவம் பார்த்து வருவதால் 1, 2

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.07.21 18:23:40 +0530

எதிர்மனுதாரர்களை அலக்களிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதார்கள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாமலும் வழக்கினை காலம் கடத்திவந்த நிலையில் நீதிமன்ற உத்தரவுப்படி வா.சா.1 ஐ மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்துள்ளார்கள் என்றும், மேலும் வழக்குரையில் கண்ட தபசில் சொத்து சம்பந்தமாக 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் வழக்கு தபசில் சொத்திற்கு சம்பந்தம் இல்லாத நத்தம் சர்வே எண்.1021/A3 என்ற சொத்தினை 2ம் பிரதிவாதி தனது மகனான சந்திரகுமார் என்பவருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கடந்த 17.10.2024ம் தேதியில் எழுதிக் கொடுத்துள்ளதாகவும், ஆகையால் அசல் வழக்கிற்கு மேற்படி சந்திரகுமார் என்பவர் அவசியகட்சி சேர்க்க வேண்டுமென கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறாகும் என்றும், மேலும், அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் கடந்த 19.07.2016ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்ச உத்தரவு வழங்கப்பட்ட பின்பு மனுதாரர்கள் தரப்பில் ஒருதலைபட்ச உத்தரவினை நீக்கம் செய்ய மனு செய்தும் அதனுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்தும் அதன்பின்பு இந்நீதிமன்றத்தால் அசல் வழக்கில் வழக்கிடை வினா செய்யப்பட்டும் வாதிகள் தரப்பில் வாதிகள் தரப்பு சாட்சிகள் 1 மற்றும் 2 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு தற்போது மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் கடைசி விசாரணைக்காக கடந்த 30.04.2026ம் தேதியில் வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் மேற்படியாக அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கினை காலம்கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தொடர்ந்து சட்டத்திற்கு புறம்பாகவும் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே, மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.07.21 18:23:48 +0530

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, ம.சா.ஆ.1, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது 2ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட நத்தம் சர்வே எண்.1021/A3 சொத்தை 2ம் மனுதாரர் தனது குமாரர் சந்திரகுமார் என்பவருக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்து அனுபவத்தையும் ஒப்படைத்துவிட்ட நிலையில், மேற்படி விபரங்கள் அனைத்தும் வாதிகளுக்கு நன்கு தெரிந்திருந்தும், மேற்படியாரை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்று கூறி இத்துடன் தாக்கல் செய்துள்ள விரிவான கூடுதல் எதிர்வழக்குரையை வாங்கி அங்கிகரித்துக் கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, அசல் வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

7) மேலும், இம்மனுவானது அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிவடைந்து, தற்பொழுது 2, 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

8) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் 2ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட நத்தம் சர்வே எண்.1021/A3 சொத்தை 2ம் மனுதாரர் கடந்த 17.10.2014 தேதியில், அதாவது இவ்வழக்கிற்கு முன்பாகவே 2ம் மனுதாரரின் மகன் சந்திரகுமார் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.07.21 18:23:55 +0530

செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்து அனுபவத்தையும் ஒப்படைத்து விட்டதாகவும், மேற்படி விபரங்கள் அனைத்தும் வாதிகளுக்கு நன்கு தெரிந்திருந்தும், மேற்படி 2ம் மனுதாரரின் குமாரர் சந்திரகுமார் என்பவரை இவ்வழக்கில் வேண்டுமென்றே கட்சி சேர்க்கவில்லை என்றும், மேற்படி சந்திரகுமார் இவ்வழக்கிற்கு மிகவும் அவசிய கட்சி என்று கூறி இத்துடன் கூடுதல் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி கூடுதல் எதிர்வழக்குரை தனது கட்சியை நிரூபணம் செய்யக்கூடிய மிக முக்கியமானதாகும் என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) மேலும், மனுதாரர்கள் தரப்பில், 2ம் மனுதாரரால் தனது மகன் சந்திரகுமார் என்பவருக்கு பிறப்பிக்கப்பட்ட 17.10.2014 அன்று பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் சார்பதிவக நகல் ம.சா.ஆ.1 ஆக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10) இம்மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பிலும், 2ம் மனுதாரர் மேற்படி சொத்தினை பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம் தனது மகன் சந்திரகுமார் என்பவருக்கு பாத்தியப்படுத்தியிருப்பதை மறுக்கவில்லை.

11) இந்நிலையில், மனுதாரர்களால் கூடுதல் எதிர்வழக்குரையில் முன்வைக்கப்பட்டுள்ள வாதம் (defence) வழக்கின் உண்மையான சர்ச்சையை தீர்மானிப்பதற்கு தொடர்புடையதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) மேலும், மனுதாரர்/2ம் பிரதிவாதி தபசில் சொத்தினை தனது மகன் சந்திரகுமார் என்பவருக்கு வழக்கிற்கு முன்பாகவே சொத்தினை பாராதீனம் செய்து கொடுத்திருப்பதால், மேற்படி சந்திரகுமார் நல்லெண்ண கிரையதாரரா? இல்லையா?, நல்லெண்ண பயனாளியா? இல்லையா? என்பதையும், இவ்வழக்கிற்கு மேற்படி சந்திரகுமார் அவசிய தரப்பினரா? இல்லையா? என்பதையும் இவ்வழக்கின் இறுதியிலேயே இந்நீதிமன்றத்தால் முடிவு காண இயலும்.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.07.21 18:24:02 +0530

13) மேலும், மனுதாரர்கள்/2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்வதால் அசல் வழக்கின் தன்மையில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. மேலும், அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கும், தரப்பினர்களுக்கு இடையே மேலும் பல வழக்குகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கும், மனுதாரர்கள் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14) இருப்பினும், மனுதாரர்கள்/2 மற்றும் 3 பிரதிவாதிகள் தங்களது தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையை மிகவும் காலதாமதமாக இந்நீதிமன்றத்தில் மனுதாரர்கள்/2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணையின்போது தாக்கல் செய்திருப்பதால் 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில் கொண்டு இம்மனுவானது நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

<u>**15) இறுதியாக,**</u>

இம்மனுவானது ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு நேரடியாக 24.07.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. **மீண்டும் அழைக்க 24.07.2026.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.07.21 18:24:11 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**1. மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :-** இல்லை

**2. மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :-**

| ஆவண எண். | நாள் | சான்றாவணங்கள் |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 17.10.2014 | 2ம் பிரதிவாதி தனது குமாரர் சந்திரகுமார் என்பவருக்கு பிறப்பித்துக் கொடுத்த பதிவு செட்டில்மெண்ட் ஆவணம் – சார்பதிவக நகல் |

**3. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**இல்லை

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.07.21 18:24:18 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.11/2026
in
O.S.No.16/2016
உத்தரவு (Draft / Fair)

நாள் : 21.07.2026